புனித அந்தோனியார் கல்லூரி
ஊர்காவற்றுறை

# பரிசளிப்பு விழா

## 03.11.2011

வியாழக்கிழமை, காலை 09.30மணி

பிரதம விருந்தினர்

**திரு.S. T.பீரிஸ்**
செயற்றிட்ட முகாமையாளர்
அறிவுசார் சமுகத்திற்கான கல்விச்செயற்றிட்டம்
வடமாகாணம்

தலைவர்

அருட்திரு க. ஜேம்ஸ் சிங்கராயர்
அதிபர்

## நிகழ்ச்சி நிரல்

- பிரதம விருந்தினரை பாண்ட் வாத்திய இசையுடன் அழைத்துவரல்
- பாடசாலைக் கொடியேற்றுதல்
- பாடசாலைக் கீதம் இசைத்தல்
- மங்கல விளக்கேற்றுதல்
- வரவேற்பு நடனம்
- இறைவணக்கம்
- வரவேற்புப்பாடல்
- வரவேற்புரை – செல்வன். அ.நியூட்டன்
- அதிபர் அறிக்கை
- நாட்டார் பாடல்
- பிரதம விருந்தினர் உரை
- பரிசில்கள் வழங்கல்
- ஒயிலாட்டம்
- தமிழ் நாடகம் “சத்தியவான் சாவித்திரி”
- நன்றியுரை – செல்வி ந.கந்தலீலா
- தமிழ்த் தாய் வாழ்த்து

**இறைவணக்கம்**

இறைவணக்கம் இனிதாய்ப்பாடி
இறைவா உம்பெயர் புகழ்கின்றோம்
சங்கமமாகி சபைதனில்வாரும்
சரணம் சரணம் இறைவனே (2)

உலகாழும் இறைவா உறவாடவருவாய் - எம்
உணர்வோடு இன்றும் அவைதனில் அமர்வாய்
சக்தியும் நீயே
சாந்தியும் நீயே 2
சரணம் சரணம் திருவடி சரணம்
உலகம் அமைதிபெற உண்மை உயர்வு பெற
விரைவாய் வருவாய் பரமனே
எமது பணி சிறக்க கல்லூரி உயர்வடைய
வரம் பல அருள்வாய் வேந்தனே

காக காக பகரிக ரிக ரிரிஸா
ரீரிரீரி கரிஸக ரிஸ கரிஸா
ஸஸாஸ ககாக மமாம பபாப
ஸாஸ ரீரி கரிஸா ஸரிகரிஸ

இருளினை அகற்றி ஒளியினை ஏற்ற - எம்
இதயத்திற் கென்றும் மெஞ்ஞானம் தருவாய்
வழியும் நீயே
வாழ்வும் நீயே 2
சரணம் சரணம் உனதடி சரணம்
உலகம் அமைதிபெற உண்மை உயர்வு பெற
விரைவாய் வருவாய் பரமனே
எமது பணி சிறக்க கல்லூரி உயர்வடைய
வரம் பல அருள்வாய் வேந்தனே

**வரவேற்புப்பாடல்**

இராகம் : ஹிந்தோளம்

அந்தோனி குடும்பத்தின் பரிசில் நாளாம்
சிறப்போடு நாமெல்லாம் மகிழும் திருநாளாம்

கலங்கரை ஒளி விளக்காம் கல்விப் புலத்தினில்
அறிவான்ற மானிட உருவாக்கல் பணியதன்
வட மாகாண செயற்திட்ட முதல்வரே
வந்தனம் தருகின்றோம் வருக வருகவே!

அந்தோனி குடும்பத்து அருட்பணி ஆயனே
ஜேம்ஸ் எனும் ராஜனே இனிய முதல்வனே
கல்வி கலையோடு ஆன்மீக அமுதத்தை
அள்ளி வழங்கிடும் வள்ளலே வருகவே!

சேவையில் உயர்ந்த ஏணியே, தோணியே!
கல்விப் பாதையினை காட்டிடும் ஆசான்களே!
பல நலம் பெற்று நீர் பாங்காய் வாழ்ந்திட
அந்தோனி பாதங்களில் படைக்கின்றோம் வருகவே!

கல்வி அதிகாரிகளே, அதிபரே, பெற்றோரே!
பழைய மாணவரே பண்புசால் பெரியோரே
நல்வரவு சொல்லி நமஸ்காரம் செய்தே
வருக வருகவென வாழ்த்துகின்றோமே.

**வரவேற்பு நடனப்பாடல்**

வரவேற்பு நடனப் பாடல்

வருக வருகவே! வருக வருக வருகவே!
தருக தருகவே! ஆசிகள் தருக தருகவே!

கலங்கரை ஒளி விளக்காம் கல்விப் புலத்தினில்
அறிவான்ற மானிட உருவாக்கல் பணியதன்
வடமாகாண செயற்றிட்ட முதல்வரே
வந்தனம் தருகின்றோம் வருக வருகவே! .... (வருக வருகவே!)

கல்லூரி தனில் கலைவிளக்காய்
காலமெல்லாம் பணிபுரியும்
எம்மினிய முதல்வரே வருக வருக வருகவே! ... (வருக வருகவே!)

கல்லூரி தனில் மாணவர் எம்
கல்விதனில் அக்கறையில்
ஊக்கமுடன் பணியாற்றும் ஆசான்களே வருகவே!

பரிசு தின வைபவத்தில்
கலந்து கொள்ளும் அனைவரையும்
அன்புநிறை சிந்தையடன்
அகமும் முகமும் மலர மகிழ்வுடன்
வரவேற்போம்

## 2010ம் ஆண்டிற்கான அதிபரின் அறிக்கை

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் 2010ம் ஆண்டிற்கான பரிசளிப்பு விழாவினை சிறப்பிக்க, பிரதம விருந்தினராக வருகை தந்துள்ள வடக்கு மாகாண கல்வி அமைச்சின் அறிவுசார் சமூகத்திற்கான கல்விச் செயற்றிட்டத்தின் (EKSP) செயற்றிட்ட முகாமையாளர் உயர்திரு. செபஸ்தியான் ததேயு பீரிஸ் அவர்களே,
தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் அவர்களே,
ஊர்காவற்றுறை கோட்டக் கல்விப் பணிப்பாளர் அவர்களே,
பிரதிக் கல்விப் பணிப்பாளர்களே,
உதவிக் கல்விப் பணிப்பாளர்களே,
ஆசிரிய ஆலோசகர்களே,
அருட்தந்தையர்களே, அருட்சகோதரிகளே,
அயற்பாடசாலைகளின் அதிபர்களே, ஆசிரியர்களே,
பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்களே,
எமது பிரதேசத்திலுள்ள நிறுவனங்களின் தலைவர்களே,
பழைய மாணவர் சங்க உறுப்பினர்களே,
பெற்றோர்களே, நலன் விரும்பிகளே,
எனது அன்பான ஆசிரியர்களே, கல்விசாரா ஊழியர்களே,
அன்புநிறை மாணவச் செல்வங்களே,

உங்கள் அனைவருக்கும் அன்பான இனிய வணக்கங்கள் கூறி, உங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றேன். ஊர்காவற்றுறை தீவகற்பத்தின் பழம்பெரும் கல்விக் கூடத்தின் 2010ம் ஆண்டிற்கான அதிபர் அறிக்கையினை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

எமது மாணவச் செல்வங்களுக்கு பரிசில்களை வழங்கிப் பாராட்ட இங்கு வருகை தந்திருக்கும், வேதசாட்சிகளின் இரத்தத்தில் முளைத்தெழுந்த விசுவாசத்தின் ஊற்றான மன்னார் பேசாலை மண்ணின் மைந்தனும், நவீன கல்வி வளர்ச்சிக்கு ஏற்ப வடமாகாணத்தின் இடைநிலைக்கல்வியை வளர்த்தெடுக்கும் பாரிய பொறுப்பினை சுமந்தேற்றுள்ள உயர்திரு செபஸ்தியான் ததேயு பீரிஸ் அவர்களே! உங்களின் வருகை எமக்குக் கிடைத்துள்ள பெரும் பாக்கியமென்றே கூறவேண்டும். தாங்கள் 1984ம் ஆண்டு யாழ் பல்கலைகழக விஞ்ஞான

பட்டதாரியாகி உடனடியாகவே கேகாலை பதூரியா மகளீர் மகா வித்தியாலயத்தில் விஞ்ஞானபாட ஆசிரியராக நியமனம் பெற்றீர்கள். ஐந்து ஆண்டுகளின் பின்னர் மன்னார் பேசாலை பாத்திமா மகளீர் மகா வித்தியாலயத்தில் பிரதி அதிபராக பதவியேற்றீர்கள். தங்களின் நிர்வாகத்திறமை மற்றும் கல்விப்பணியில் உள்ள நிபுணத்துவம் ஆகியவற்றை கண்டுகொண்ட மேலதிகாரிகள் தங்களை பாடசாலை வட்டத்திற்குள் ஒடுக்கிவிடாமல் மன்னார் கல்விவலயத்தின் பிரதான பணிகளுள் ஒன்றான கல்வி திட்டமிடல் பணிப்பாளராக 1999ம் ஆண்டு நியமனம் செய்தார்கள். பன்னீராண்டுகள் சிறப்பாக இப்பணியை ஆற்றியதன் பயனாக உங்களின் திறமைகளைக் கண்டுகொண்ட வடக்கு மாகாண கல்வி அமைச்சின் அதிகாரிகள் தங்களை 2010ம் ஆண்டு செயற்றிட்ட முகாமையாளராக நியமனம் செய்தார்கள்.

இவ்வாறு பல பதவியுயர்வுகளைப் பெற்றுள்ள தாங்கள் தற்போது ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் இலங்கையில் செயற்படுத்தப்பட்டு வரும் அறிவுசார் சமூகத்திற்கான கல்விச் செயற்றிட்டத்தின் வடக்கு மாகாணத்தின் செயற்றிட்ட முகாமையாளராக சேவையாற்றி வருகின்றீர்கள். தங்களின் மும்மொழிப் புலமையும் கல்வியியலில் தாங்கள் பெற்றுள்ள உயர்வாண்மையும் தங்களுக்கு மாகாணமட்ட கல்வி நிர்வாகச் சேவையில் பெருமதிப்புடன் பணியாற்ற துணைநிற்கின்றன. தங்களின் எளிமைமிகு செயற்பாடுகளும், கீர்த்திமிகு சேவைகளும், அனைவரையும் அன்புடன் வரவேற்கும் பண்பும், தாங்கள் மென்மேலும் உயர்வடைய துணையாக இருக்கின்றன என்பது எமது நம்பிக்கை. இதற்கு எல்லாம் வல்ல இறைவனின் கிருபையும் மடு அன்னையின் பரிந்து பேசுதலும் நிறைவாகக் கிடைக்க இறையருள் வேண்டி நின்கின்றேன்.

## அதிபர் கற்கை விடுமுறை

11.01.2010 தொடக்கம் 31.12.2010 வரை நான் தேசிய கல்வி நிறுவகத்தில் கல்வி முகாமைத்துவத்தில் பட்டமேற்படிப்பை மேற்கொள்வதற்காக கற்கை விடுமுறையில் சென்றிருந்தேன். அக்காலப்பகுதியில் கல்லூரியின் அன்றாட செயற்பாடுகளைக் கவனித்துவந்த பிரதி அதிபர் திரு P.W. நவராஜா அவர்களிற்கும்,

உதவி அதிபர் அருள்திரு A.றொபின்சன் ஜோசவ் அவர்களிற்கும் ஏனைய ஆசிரியர்களிற்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்

## மாணவர் விபரம்

2010ல் கல்லூரியின் மாணவர் தொகை 20 % வளர்ச்சி பெற்று 475 ஆக உயர்வடைந்தது. உயர்தரத்தில் 35 மாணவிகள் கல்வி கற்றுவருகின்றனர். மீளக்குடியமர்ந்த மாணவர்கள் பலர் கல்லூரியில் மீண்டும் வந்து இணைந்து கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

## ஆசிரிய ஆளணி

2010ல் எமது கல்லூரியில் 23 நிரந்தர ஆசிரியர்களும் 05 தற்காலிக இணைப்பு ஆசிரியர்களும் இரண்டு பகுதி நேர ஆசிரியர்களும், 02 உதவி ஆசிரியர்களுமாக 32 பேர் சேவையாற்றி வந்தனர். இவர்களில் திரு.T.சிறிபிரகாஸ், திரு.S.பரராசசேகரம், திரு.N.வாசுதேவன், திருமதி A.L. ஜெயதாசன், திரு.S. முரளிதரன் ஆகியோர் வேறு பாடசாலைகளில் இருந்து இடமாற்றம் பெற்று எம்முடன் 2010ல் இணைந்து கொண்டவர்களாவர். ஆசிரியை திருமதி S. நந்தகுமார் பட்டபின் கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்காக கற்கை விடுமுறையில் சென்றிருந்தார்.

இதேவேளை எமது கல்லூரியின் நிரந்தர ஆசிரியர்களான திருமதி சு.நவராஜா,திருமதி F.J. கொலின் மற்றும் திருமதி P. அமுதசிங்கம் மற்றும் தற்காலிக இணைப்பில் இருந்த திருமதி K. .கண்ணதாசன் திரு S.திருச்செந்தூரன், திரு.T.யசோதரன் ஆகியோரும், பகுதி நேரமாக பணியாற்றிய, திருமதி S.சதீஸ்கரன் மற்றும் செல்வி.M.தங்கராசா ஆகியோரும் இடமாற்றம் பெற்றுச் சென்றனர். இதன்போது பெருமளவு ஆசிரிய ஆளணிப் பற்றாக்குறையை எதிர்கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டது.

இவர்களில் ஆசிரியர் திருமதி சுரேஜினி நவராஜா 31.12.2010ல் இடமாற்றம் பெற்றுச் சென்றார். விஞ்ஞான பாட ஆசிரியராக கடந்த 10 வருடங்களாக கடைமையாற்றிவந்த இவர் தனது சேவையின் போது பாடரீதியாக பல சாதனைகளிற்கு வழிவகுத்ததோடு மாணவர்களின் வளர்ச்சிக்காக அயராது உழைத்துவந்தார். 2009ல் க.பொ.த சாதாரணதரத்தில் விஞ்ஞான பாடத்தில் தீவகத்தின் அதியுயர் சித்தி வீதமான 84 வீத சித்தியை எமது கல்லூரி பெற்றுக்கொண்டமையை சிறப்பாகக் குறிப்பிடமுடியும். இணைப்பாட விதான செயற்பாடுகள் உட்பட கல்லூரியின் அனைத்து செயற்பாடுகளிலும் இவர் முழு ஈடுபாடு கொண்டிருந்தார்.

திருமதி F.J. கொலின் அவர்கள் எமது கல்லூரியின் பழைய மாணவியாகவும் சங்கீத ஆசிரியையாக 6 ஆண்டுககளும் கல்லூரியோடு இணைந்திருந்து பணியாற்றியவர். திருமதி P. அமுதசிங்கம் அவர்கள் வர்த்தக ஆசிரியையாக மூன்று ஆண்டுகள் பணியாற்றியவர். இவர்கள் ஆற்றிய அளப்பரிய சேவைகளுக்கு கல்லூரிக் குடும்பம் சார்பில் உளமார்ந்த நன்றிகளைக் கூறுவதோடு செல்லும் இடங்களில் சிறப்பாகப் பணியாற்றி பல்புகழையும் பெறவேண்டுமென வாழ்த்துகிறேன்.

2010ல் எமது நிரந்தர ஆசிரிய ஆளணியில் 08 பட்டப்பின் கல்வி டிப்ளோமா பெற்ற பட்டதாரிகள் உட்பட 16 பட்டதாரிகளும் 05 பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் 2 உதவி ஆசிரியர்களுமாக 23 பேர் சேவையில் இருந்தனர்.

## கல்விசாரா ஊழியர்

## எமது அஞ்சலிகள்

எமது கல்லூரியில் சுமார் 5 வருடஙங்களாக பாடசாலைத் தொழிலாளியாகக் கடைமையாற்றிவந்த திரு S. செபஸ்தியாம்பிள்ளை அவர்கள் 10.08.2010 அன்று சரவணைப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் சிக்கி அகால மரணமடைந்தார். இவருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவந்த இவரது சேவையை நாம் என்றும் மறந்துவிடமுடியாது. தற்போது எமது கல்லூரியில் பாடசாலைக்

காவலாளி ஒருவரும், ஆய்வுகூட உதவியாளர் ஒருவரும் மட்டுமே சேவையாற்றி வருகின்றனர்.

காலம்சென்ற திரு S. செபஸ்தியாம்பிள்ளை அவர்களது வெற்றிடம் இன்றுவரை நிரப்பப்படவில்லை. அலுவலக உதவியாளரோ முகாமைத்துவ உதவியாளரோ அல்லது பாடசாலைத் தொழிலாளியோ இல்லாதபோதும் எமது கல்லூரியின் அலுவலக உதவியாளர் திரு. X. M. புறோகியர் தொடர்ந்தும் கோட்டக் கல்விப் பணிமனையிலேயே இணைக்கப்பட்டு அங்கு பணியாற்றிவருகின்றார். இவ்வெற்றிடமும் இதுவரை நிரப்பப்படவில்லை. இது பெரும் சுமையாக உள்ள எமது நாளாந்த நிர்வாகப் பணிகளை முனைப்புடன் செயற்படுத்த பாரிய தடையாக உள்ளதை பல்வேறு நிலைகளில் உள்ளவர்களுக்கு எடுத்துக் கூறியும் உரிய நடவடிக்கைகள் எடுக்கபடாதுள்ளமை மேலும் கவலையளிப்பதாகவே உள்ளது.

பெரும்பாலான ஆசிரியர்கள் தினமும் நீண்டதூரம் பிரயாணம் மேற்கொண்டு இங்கு வந்து கற்பித்தலில் ஈடுபட்டு வருகின்றனர். எமக்கு அண்மையில் உள்ள கஸ்டப்பிரதேச பாடசாலைகள் எதிர்நோக்கும் அனைத்துக் கஸ்டங்களையும் இவர்களும் அனுபவிக்கின்ற போதும், கஸ்ட பிரதேச சேவை என்ற அதிகுறைந்த அங்கீகாரத்தைக் கூட இவர்களால் பெறமுடியாதிருப்பது கவலைக்குரிய விடயமாகும். பல இடர்கள் மத்தியில் அரும்பணியாற்றிவரும் இவ் ஆசிரியர்களையும் கல்விசாரா ஊழியர்களையும் இவ்விடத்தில் நன்றியுடன் பாராட்டுகின்றேன்.

## கல்வி அபிவிருத்தி

க.பொ.த சாதாரணதர மற்றும் உயர்தர பெறுபேறுகள் தொடாந்தும் சிறப்பாகக் காணப்பட்டன. 2010ல் க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றியோரில் 48 வீதமானோர் உயர்தரத்தில் கல்வி கற்பதற்கு தகுதி பெற்றுள்ளனர். உயர்தரப்பரீட்சையில் 2010ல் தோற்றியோரில் 76 % வீதமானோர் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிக்கத் தகுதிபெற்றுள்ளதோடு A B C சிறந்த பெறுபேறாகவுள்ளது. இவர்களில் செல்வி M. மேரி டிசானி

கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்தில் சங்கீத பாடநெறிக்கும், செல்வன் A.R.அனோஜன் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கலைத்துறைக்கும் தெரிவுசெய்யப்பட்டமை கல்லூரியின் கல்வியடைவின் உயர்விற்கு சான்றாக அமைந்துள்ளன.

கணினி கற்கை நிலையத்தில் (CLC) அதன் பயன்பாட்டினை ஊக்குவிக்கும் முகமாக கல்வி அமைச்சினால் நடாத்தப்பட்ட தகவல் தொழில்நுட்ப தேசிய விருது வழங்கும் போட்டியில்(National Excellence Award in ICT) எமது கல்லூரி தீவக வலயத்தில் முதன்மை இடத்தையும், வடக்கு மாகாணத்தில் 7வது இடத்தையும் பெற்று 5 இலட்சம் ருபா பெறுமதியான பரிசிற்குத் தகுதிபெற்றுக் கொண்டமை அதன் சிறப்பான செயற்பாட்டிற்கான சான்றாக அமைந்துள்ளது. இதற்காக உழைத்த கணினி நிலைய முன்னாள் பொறுப்பாசிரியர் திரு, T. யசோதரன் அவர்களுக்கும், தற்போதைய பொறுப்பாசிரியர் திரு. L. I. றோகன் அவர்களுக்கும் பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். மேல்வரும் ஆண்டுகளில் கணினி மென்பொருள் சம்பந்தமாக மாணவர்களின் ஆக்கங்கள் அதிகமாக இடம்பெற்று உயர்நிலையடைய வேண்டும் என்பது எமது இலக்காகும். கணினி நிலையத்திற்கு நீண்ட காலமாக பெற்றுக் கொள்ளப்படாதிருந்த தளபாடங்களையும் 2010ம் ஆண்டில் பெற்றுக் கொண்டோம்.

2010ல் க.பொ.த சாதாரணதர மாணவர்களுக்கான கணித பாடத்தில் விசேட செயற்றிட்டங்கள் தொடர்ந்தும் அமுல்படுத்தப்பட்டு வந்தன. இச் செயற்றிட்டம் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இதே போன்று விஞ்ஞான பாடத்திலும் செயற்றிட்டங்கள் அமுல்படுத்தப்பட்டமை மற்றும் புதிய விஞ்ஞான ஆய்வு கூடத்தின் உச்சப்பயன்பாடு விஞ்ஞானபாட பெறுபேறுகள் 60%மாகவும் கணிதபாட பெறுபேறுகள் 49%மாகவும் உயர்ந்து காணப்பட ஏதுவாகின. அண்மைக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட நாடகமும் அரங்கியலும், வர்த்தகம், சங்கீதம், புவியியல், தகவல் தொழில்நுட்பம் மற்றும் கடல்வளம் ஆகிய பாடங்களில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று மாணவர்கள் 100% சித்தி பெற்றள்ளமையையும் இங்கு குறிப்பிட வேண்டும். அத்துடன் தமிழ், சமயம், ஆகிய

பாடங்களுக்குரிய சித்தி வீதமும் உயர்ந்துள்ளது. மேற்படி பாடங்களை கற்பித்த ஆசிரியர்களை இவ்விடத்தில் சிறப்பாக பாராட்டுகின்றேன்.

2010ல் தரம் 5 புலமைப் பரிசில் உதவி பெறும் 05 மாணவர்கள் தொடர்ந்து அதனைப் பெற்று வருகின்றனர். உதவி அரசாங்க அதிபர் பணிமனையினால் உயர்தர மாணவர்களுக்கு வழங்கப்படும் சிப்தொர புலமைப் பரிசிலில் 08 மாணவர்கள் புதிதாக இணைந்து கொண்டனர்.

விஞ்ஞான வினாடி வினாப் போட்டியில் எமது கல்லூரி மாணவர்கள் மாவட்ட மட்டத்தில் 8 இடங்களைப் பெற்றுக் கொண்டதோடு மாகாண மட்டத்தில் தரம் 6 மாணவன் செல்வன் A.F.ஜெனிபர் 3ம் இடத்தையும் பெற்றுக் கொண்டார். இது தீவக வலயத்திற்கு கிடைத்த ஒரேயொரு வெற்றியாக அமைந்தது.

விதாதா வள நிலையத்தினால் மாவட்ட மட்டத்தில் நடாத்தப்பட்ட காலநிலை மாற்றம் தொடர்பான வினாடிவினா போட்டியில் மூவர் கொண்ட எமது மாணவர் அணி 3ம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. இலங்கை ஒலிம்பிக் குழுவினால் யாழ் மாவட்டத்தில் நடாத்தப்பட்ட வினாடிவினா போட்டியில் உயர்தர மாணவர் 4 பேரைக் கொண்ட எமது அணி 2ம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

## இணைப்பாட விதான செயற்பாடுகள்

## தமிழ்தினப் போட்டி

2010ல் தமிழ்த்தனப் போட்டியில் பல மாணவர்கள் மாவட்டமட்ட போட்டியில் கலந்து கொண்டனர். திறந்த போட்டியான இசை நாடகப் போட்டியில் எமது கல்லூரி மேடையேற்றிய **சத்தியவான் சாவித்திரி** நாடகம் மாவட்டமட்டத்திலும் மாகாணமட்டத்திலும் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. இதனை நெறிப்படுத்திய திருமறைக்கலாமன்ற

கலைஞர் திரு. தைரியநாதர் அவர்களுக்கும் பொறுப்பாக இருந்த அருட்திரு. A. றொபின்சன் ஜோசப் அடிகளாருக்கும், ஆசிரியை செல்வி ந. கந்தலீலா அவர்களுக்கும் பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

## விளையாட்டு

## தேசிய வெற்றிகள்

விளையாட்டுத் துறையில் எமது மாணவர்கள் தொடர்ந்தும் முன்னிலையில் இருந்து செயல்பட்டு வருகின்றனர் என்பதை நான் பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன். 2010ல் 30 மாணவர்களைக் கொண்ட உடற்பயிற்சி அணி தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் 06 பேரைக் கொண்ட அஞ்சல் ஓட்ட அணி (4X400m) 3ம் இடத்தையம் பெற்றுக் கொண்டது. இவ் மெய்வல்லுனர் அணியின் வெற்றியானது யாழ்மாவட்டத்திற்கு கடந்த 25 வருடங்களில் சுவட்டு நிகழ்வுகளில் கிடைத்த முதலாவது வெற்றியாகும். இம்மாணவர்களையும் இதற்குப் பொறுப்பாக இருந்த ஆசிரியர் திரு. K. சசிக்குமார் மற்றும் உப அதிபர் அருள்திரு அ.றொபின்சன் ஜோசவ் அவர்களிற்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வலய மட்டத்தில் எமது கல்லூரி புள்ளி அடிப்படையில் தொடர்ந்தும் முன்னிலையில் திகழ்ந்து வருகின்றது. பெரு விளையாட்டுக்களில் வலய மட்டத்தில் சிறந்த வெற்றிகளைப் பெற்று மாவட்ட மட்டபோட்டிகளிலும் சிறப்பாகப் பங்குபற்றினோம்.

## இல்லமெய்வல்லுநர் போட்டிகள்

2010.02.19ல் இல்லமெய்வல்லுநர் போட்டி சிறப்பாக நடைபெற்றது. பிரதம விருந்தினராக யாழ்மாவட்ட கரித்தாஸ் கியூடெக் நிறுவன இயக்குனர் அருள்திரு C.G. ஜெயக்குமார் அவர்கள் கலந்து சிறப்பித்தார். சேவியர் இல்லம் முதன்மையிடத்தைப் பெற்றுக்கொண்டது.

## பெரு விளையாட்டுக்கள்

உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம் மற்றும் மென்பந்து துடுப்பாட்டம் போன்ற விளையாட்டுக்களிலும் எமது அணிகள் சிறப்புடன் விளையாடி வருதோடு மாவட்ட மட்டத்தில் பல வெற்றிகளையும் பெற்றுள்ளன.

## உள்ளக விளையாட்டுக்கள்

உள்ளக விளையாட்டுக்களில் பூப்பந்தாட்டம் மற்றும் சதுரங்கம் போன்றவற்றில் இவ்வருடமும் மாவட்ட மட்டத்திற்கு சென்று பங்குபற்ற எமது அணிகள் தகுதி பெற்றிருந்தமையை இங்கு சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். இவற்றில் நாம் இன்னும் கடுமையான பயிற்சிகளை மேற்கொள்ளவேண்டிய தேவையுள்ளதையும் இங்கு குறிப்பிடல் வேண்டும்.

## மதிய உணவு

உலக உணவுத்திட்டத்தின் கீழ் தரம் 6 - 9 மாணவர்களிற்கு மதிய உணவு வழங்கும் திட்டம் தொடர்ந்தும் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. பழைய மாணவர் சங்கங்களின் உதவியோடு தரம் 10 - 13 மாணவர்களுக்கும் இத்திட்டத்தை தொடர்ந்தும் அமுல்படுத்தி வருகின்றோம். வறுமைக் கோட்டின்கீழ் வாழும் பெரும்பான்மையான மாணவர்கள் உள்ள எமது கல்லூரிக்கு இத்திட்டம் உண்மையிலேயே மிகவும் பயனுள்ள திட்டம் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

## பரிசளிப்பு தினம்

2010ம் ஆண்டிற்கான பரிசளிப்பு தினம் 13.07.2010 அன்று சிறப்பாக நடைபெற்றது. இலண்டனிலுள்ள பழைய மாணவர் ஐரோப்பிய சங்கக் கிளையின் தலைவர் திரு. ஜோசவ் மனுவேல்பிள்ளை அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்திருந்தார். சிறந்த

அடைவு பெற்ற மாணவர்களுக்கு பரிசு வவுச்சர்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இதற்கான நிதியை கனடா அன்ரோனியன் நிதியத்திலிருந்து (Antonian Trust Canada) பெற்றுக்கொண்டோம்

## மன்றங்கள்

எமது கல்லூரியில் இயங்கிவரும் தமிழ் இலக்கிய மன்றம், ஆங்கில இலக்கிய மன்றம், உயர்தர மாணவர் மன்றம், கத்தோலிக்க மாணவர் மன்றம், இந்து மாணவர் மன்றம், சாரணியம், சென் ஜோண்ஸ் அம்புலன்ஸ் போன்றவை தொடர்ந்தும் மாணவர் ஆளுமை விருத்தியிலும் சேவை செய்வதிலும் சிறப்பாக செயற்பட்டு வருகின்றன. இவை, மாதத்தில் இருநாட்களில் பொதுக் கூட்டங்களை நடத்தியதோடு, ஒளிவிழா, சரஸ்வதி பூசை போன்ற முக்கிய நிகழ்வுகளையும் சிறப்பாக நடத்தியிருந்தன. எமது சுற்றாடலை சிறந்தமுறையில் பேணவும் மாணவரிடம் அது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவுமென சுற்றாடல் குழு எமது கல்லூரியில் அமைக்கப்பட்டு சிறப்பாக இயங்கி வருகின்றது. இவற்றிக்கு பொறுப்பாக இருந்து வழிநடத்தும் பொறுப்பாசிரியர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

## பழைய மாணவர் சங்கங்கள்

பல்வேறு நாடுகளில் வசித்துவரும் எமது பழைய மாணவர் சங்கங்கள் எமக்கு பல வழிகளிலும் உதவிகள் புரிந்து வருகின்றனர். கனடாவில் இயங்கிவரும் பழைய மாணவர் சங்கம் (Kayts St.Antony's College Alumini Association, Canada) வருடாந்தம் நடைபெற்று வரும் பரிசளிப்பு தினத்திற்கான உதவிகளை வழங்கி வருவதோடு, பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் அன்றாட செயற்பாடுகளிற்கான நிதி உதவிகளையும் வழங்கிவருகின்றது. இச்சங்க உறுப்பினர்களால் நிறுவப்பட்டுள்ள நம்பிக்கை நிதியம் 2010ல் ரூபா 100,000.00 கல்லூரித் தேவைக்காக அன்பளிப்பச் செய்துள்ளது. இன்னும் மேலதிகமான

தேவைகளுக்காக அவர்களிடம் விண்ணப்பித்துள்ளோம். இவ்விடத்தில் இந்நிதியத்தை நிறுவியவர்களை நன்றியுடன் நினைவு கூருவதோடு இதனை நிர்வகிக்கும் கொழும்பிலுள்ள பழைய மாணவர்களிற்கும் நன்றி கூறுகின்றேன்.

ஐரோப்பிய ஒன்றியத்திற்காக லண்டனில் இருந்து இயங்கி வரும் பழைய மாணவர் சங்கம் (St.Antony's College Kayts Alumini Association Europe) திரு. ஜோசவ் மனுவேல்பிள்ளை அவர்களின் தலைமைத்துவத்தில் சிறப்புடன் இயங்கிவருக்கின்றது. வருடாந்தம் ஒன்றுகூடல்களை நடத்துவதுடன் கல்லூரியின் வளர்ச்சிக்கு முதன்மையான பங்களிப்பை ஆற்றிவருகின்றது. குறிப்பாக கல்லூரியுடன் இணைந்துள்ள விடுதிச்சாலையில் தங்கி கல்விகற்றுவரும் சிறார்களை பராமரிப்பதற்கு தம்மால் இயன்ற உதவிகளை வழங்கி வருகின்றமையை நன்றியுடன் நினைவு கூர்கின்றேன்.

தென்னிலங்கையில் செயற்படும் பழைய மாணவர் சங்கமும் (St.Antony's College, Past Pupils' Association, South Ceylon Branch) அவ்வப்போது இயன்ற உதவிகளைச் செய்து வருகின்றது. சென்ற வருடம் கொழும்பில் நடைபெற்ற தேசிய மட்ட உடற்பயிற்சிப் போட்டிக்கு எமது மாணவர்கள் சென்றபோது அன்புடன் உபசரித்து உணவுளைப் பரிமாறி இயன்ற உதவிகளை வழங்கியிருந்தார்கள். அவர்களிற்கும் எமது நன்றிகள்.

ஊர்காவற்றுறையில் இயங்கிவரும் தாய்ச்சங்கமும் (Antonians Kayts) எப்போதும் எமக்கு அருகில் இருந்து இயன்ற உதவிகளைச் செய்து வருகின்றது. ஆசிரியர்தினம் மற்றும் பரிசளிப்பு தினம் போன்றவற்றிற்கு அன்பளிப்புகளை வழங்கி எமக்கு ஆக்கமும் ஊக்கமும் தருகின்றது. அத்துடன் தற்போது நடைமுறையில் உள்ள பாடசாலை மேம்பாட்டுத் திட்டதில் (PSI) இணைந்து கல்லூரியின் வளர்ச்சியில் பங்கெடுத்து வருகின்றமை ஓர் சிறப்பம்சமாகும்.

பெற்றோர் பிரதிநிதிகளை உள்ளடக்கிய பாடசாலை அபிவிருத்திச் சங்கம் சிறப்பான முறையில் செயற்பட்டுவருகின்றது. மாணவர்களுக்கான மதிய உணவுத்திட்டம், அலுவலக

உதவியாளர்களுக்கான நிதி, இணைபாடவிதான செயற்பாடுகள் மற்றும் தளபாட திருத்தங்கள் பராமரிப்புக்கள் ஆகியவற்றிக்கு இவர்கள் உதவிவருகின்றனர். 2010ல் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் சமையல் கூடம் கட்டப்படுவதற்கு உதவி அளித்தமையை இங்கு சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். எமது கல்லூரி வளர்ச்சிக்கு பலவுதவிகளைப் புரிந்து வரும் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றிகளைக் கூறுவது இன்றியமையாததாகும்.

இதைத் தவிர தனிப்பட்ட முறையிலும் பழைய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகள் பல உதவிகளைச் செய்துவருகின்றனர். 2010ல் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில்முயற்சி அமைச்சர் கௌரவ டக்லஸ் தேவானந்தா அவர்களினால் கல்லூரிக்கென்று 160,000.00 ரூபா அன்பளிப்பாக வழங்கப்பட்டு ஒவ்வொரு வகுப்பறைகளுக்கும் சிறியரக இரும்பு அலுமாரிகள் பொறுத்தப்பட்டன. இவர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## சிந்தனைக்கு

மாறிவரும் உலகின் தொடர் சவால்களை எதிர்கொள்ளக் கூடிய ஆற்றலும் வலிமையையும் கொண்ட புதிய சமூகமொன்றைக் கட்டியெழுப்பும் கடமை தற்போது பாடசாலைகளுக்கு உண்டு. அதேவேளை காலத்தின் தேவைக்கும் தொழில் சந்தையின் கேள்விக்கும் பொருத்தமான எதிர்கால சந்ததியை உருவாக்க வேண்டிய பொறுப்பும் பாடசாலைகளிடம் விடப்பட்டுள்ளது. எனவே வெறுமனே ஏட்டுக்கல்வியை மட்டும் கொண்டிராமல் தனிநபர் திறன்களை விருத்தி செய்வது ஆசிரியப் பணியின் இலக்காகும். இதனை மையமாக வைத்தே "ஆளுமையும் இறைநம்பிக்கையும் கொண்ட சமூகம்" என்ற பாடசாலை நோக்கக் கூற்றையும், "நவீன தொழில்நுட்ப அறிவுடன் கூடிய திறன்களை வளர்த்தலும், சமய சமூக விழுமியங்களின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்ட முதிர்ச்சியுடைய சமுதாயத்தினை உருவாக்குதலும்" என்ற பணிக்கூற்றையும் நாம் தெரிந்தெடுத்துள்ளோம். ஆகவே புதிய கல்விச் சிந்தனைகள், புதிய கலைத்திட்ட மாற்றங்கள்

ஆகியவற்றை நன்கு உள்வாங்கி, விரைவாக மாறிக்கொண்டிருக்கும் உலகில், எமது பிள்ளைகள் நிலையானதோர் இடத்தினைப் பெற்றுக்கொள்ள, கிடைக்கின்ற சகல வளங்களையும் நன்கு பயன்படுத்திக் கொள்வதுடன், சளைக்காது கடின முயற்சி செய்வதுடன், உயர் விழுமியங்களைப் போற்றிப் பேணுகின்றவர்களாக இருப்பது, எமது எதிர்காலம் ஒளிமயமானதாக அமைய துணைபுரியும். எனவே நாம் எமது கல்விச் செயற் திட்டங்களில் ஒருமித்த கருத்தை கொண்டவர்களாக இருப்பதுடன், ஒன்றிணைந்த செயற்பாடுகளையும், புரிந்துணர்வுகளையும், அர்ப்பணிப்பையும், பிறரன்பையும் கொண்டிருப்பது அவசியமானதாகும்.

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி 1872ம் ஆண்டு வணபிதா J. போய்சோ (அ.ம.தி.) அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. எனவே அடுத்துவரும் ஆண்டாகிய 2012ம் ஆண்டு கல்லூரி ஸ்தாபிக்கப்பட்ட 140வது ஆண்டு நிறைவுபெறும் சிறப்பான ஆண்டாகும். எனவே எமது கல்லூரித் தாயின் வளர்ச்சியின் இன்னொரு மைல்கல்லாக விளங்கும் 2012ம் ஆண்டு எமது செயற்பாடுகள் மிகவும் உத்வேகம் பெறுவதுடன் மென்மேலும் உயர்ந்து செல்லவேண்டும் என்பது எமது பேராவலாகும்.

## நன்றிகள்

மாணவர் கல்வியிலும், கல்லூரி வளங்களிலும் பல முன்னேற்றங்களிற்கு உந்து சக்தியாகவிருந்து செயற்பட்ட அனைத்து நெஞ்சங்களுக்கும் எனது பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்சியடைகின்றேன். சிறப்பாக எமது தேவைகள் பலவற்றை அக்கறையோடு நிறைவேற்றுவதோடு எப்போதும் எமக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்துவருகின்ற தீவக வலயத்தின் கல்விப் பணிப்பாளர் உயர்திரு. G. V. இராதாகிருஸ்ணன் அவர்களுக்கும், எமக்கு அருகே இருந்து எமது செயற்பாடுகள் அனைத்திற்கும் தொடர்ந்து ஆதரவளித்துவரும் ஊர்காவற்றுறை கோட்டக்கல்விப்பணிப்பாளர் மதிப்பார்ந்த திரு. T. சோமசேகரம் அவர்கட்கும், எமது கல்வி அடைவு அபிவிருத்திற்கு பல உதவிகளைப் புரிந்துவரும் பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள், உதவிக்கல்விப்பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் அனைவரையும் நன்றியுடன் நினைவுகூறுகின்றேன். அத்தோடு இன்றையதினம் இங்கு

பிரதம விருந்தினராக கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்துக் கொண்டிருக்கும் உயர்திரு. S. T. பீரிஸ் அவர்களுக்கும், பொறுமையுடன் செவமடுத்த உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைக் கூறி இவ்வறிக்கையினை நிறைவு செய்கின்றேன்.

வணக்கம்.

வணபிதா. க. ஜேம்ஸ் சிங்கராயர்,
அதிபர் 03.11.2011

**பரிசுகள் பெறும் மாணவர்கள் விபரம்**

**ஒவ்வொரு தரத்திலும் பாடரீதியாக பரிசு பெறும் மாணவர்கள்.**

| தரம் 6 2010 | 1ம் பரிசு | 2ம் பரிசு | 3ம் பரிசு |
|---|---|---|---|
| தமிழ் | அ. பெ.ஜெனிபர் | ஞா. றிச்மன் | சி. தேனுஜன் |
| கணிதம் | அ. பெ.ஜெனிபர் | ஞா. றிச்மன் | இ. அரிதரன் |
| ஆங்கிலம் | க. சரண்ராஜ் | த. இப்சன் பினே | அ. பெ.ஜெனிபர் |
| விஞ்ஞானம் | அ. பெ.ஜெனிபர் | க. அன்ரனி யூட்சன் | சி. தேனுஜன் |
| வரலாறு | அ. பெ.ஜெனிபர் | வ. ஜிந்துசன் | ம. அபினித் யதுசன் |
| புவியியல் | அ. பெ.ஜெனிபர் | சி. தேனுஜன் | த. இப்சன் பினே |
| சித்திரம் | அ. பெ.ஜெனிபர் | ம. அபிநாத் யதுசன் | இ. அரிதரன் |
| சங்கீதம் | வ. ஜிந்துசன் | தே. ஸ்ரெபான் | ப. சனலக்சன் |
| நாடகம் | ஞா. றிச்மன் | க. ஜெனிஸ்ரன் | அ.அல்பிரட் நிசாந்தன் |
| றோ.கத்தோ. | அ. பெ.ஜெனிபர் | சி. தேனுஜன் | ஞா. றிச்மன் |
| இந்துசமயம் | வ. ஜிந்துசன் | ப. சனலக்சன் | இ. சுஜித் |
| சுகாதாரம் | அ. பெ.ஜெனிபர் | க.ஆன்ரனியூட்சன் | ம. அபினித் யதுசன் |

| தரம் 7 2010 | 1ம் பரிசு | 2ம் பரிசு | 3ம் பரிசு |
|---|---|---|---|
| தமிழ் | ஸ்ரீ. டினோசன் | அ.சால்ஸ்டிறோசன் | ஜே.பிரதீபன் |
| கணிதம் | ஸ்ரீ. டினோசன் | ச.சசிகுமார் | தே.அன்ரனி அன்றூ |

| | | | |
|---|---|---|---|
| ஆங்கிலம் | ஸ்ரீ. டினோசன் | தே.நிதுசன் | தே.அன்ரனி அன்றூ |
| விஞ்ஞானம் | ஸ்ரீ. டினோசன் | தே.அன்ரனிஅன்றூ | அ.சால்ஸ்டிறோசன் |
| வரலாறு | ஸ்ரீ. டினோசன் | தே.அன்ரனிஅன்றூ | அ.சால்ஸ்டிறோசன் |
| புவியியல் | ஸ்ரீ. டினோசன் | தே.அன்ரனிஅன்றூ | ஜெ.ஜோசப்பிரதீபன் |
| சித்திரம் | சி. துவாரகன் | ஜெ.ஜோசப்பிரதீபன் | அ.மில்ரன் பிரசாந் |
| சங்கீதம் | தே.அன்ரனிஅன்றூ | நி.போல்லக்ஸ்மன் | அ.சால்ஸ்டிறோசன் |
| நாடகம் | ஸ்ரீ. டினோசன் | ஜே.கிசாந்தன் | கி.வி.நிரஞ்சன் |
| றோ.கத்தோ. | அ.சால்ஸ்டிறோன் | ஜெ.ஜோசப்பிரதீபன் | தே.அன்ரனி அன்றூ |
| இந்துசமயம் | ஸ்ரீ. டினோசன் | நி.போல்லக்ஸ்மன் | ப.விஸ்னுராஜ் |
| சுகாதாரம் | ஸ்ரீ. டினோசன் | ஜெ.ஜோசப்பிரதீபன் | அ.மில்ரன் பிரசாந் |

| தரம் 8 2010 | 1ம் பரிசு | 2ம் பரிசு | 3ம் பரிசு |
|---|---|---|---|
| தமிழ் | ஜெ. றஜீவன் | வி.கலைவாணன்,சு. நாகசுரேன் சு.க.யோண்சன், சே.நாகமதுசன் | |
| கணிதம் | ஜெ. றஜீவன் | சு. நாகசுரேன் | சே. நாகமதுசன் |
| ஆங்கிலம் | ஜெ. றஜீவன் | சி.மேவின்யூட் | வி.கலைவாணன் |
| விஞ்ஞானம் | சு. நாகசுரேன் | சி.மேவின்யூட் | மு.சயந்தன் |
| வரலாறு | வி.கலைவாணன் | ஜெ. றஜீவன், க.வி.நிக்சன், மு.சயந்தன் | |
| புவியியல் | சு.க.யோண்சன் | மு.சயந்தன் | ஜெ. றஜீவன் |
| சித்திரம் | சு. நாகசுரேன் | க.விநிக்சன், | ம.யுலிற்றன் |
| குடியுரிமை | சு.க.யோண்சன் | அ.அருள் ஜொஜிந்தன் | ஜெ.றஜீவன், சி.மேவின்யூட், வி.கலைவாணன் |
| சங்கீதம் | வி.கலைவாணன் | சு.க.யோண்சன் | சி.மேவின்யூட் |
| நாடகம் | ஜெ. றஜீவன் | சே. நாகமதுசன் | மு.சயந்தன் |
| றோ.கத்தோ. | ஜெ. றஜீவன் | ஜெ. ஜேசுதன் | கி.கெதோடியஸ்மேவின் |
| இந்துசமயம் | மு.சயந்தன் | சு. நாகசுரேன் | சே. நாகமதுசன் |
| சுகாதாரம் | வி.கலைவாணன் | சி.மேவின்யூட் | கி.கெதோடியஸ்மேவின் |

| தரம் 9 2010 | 1ம் பரிசு | 2ம் பரிசு | 3ம் பரிசு |
|---|---|---|---|
| தமிழ் | இ.றெக்ஸ் குயின்ரன் | சி.கெயின்ஸ் | ச.சதீஸ்குமார் |
| கணிதம் | இ.றெக்ஸ் குயின்ரன் | ச.சதீஸ்குமார் | அ.சாள்ஸ்டிலக்சன் |
| ஆங்கிலம் | இ.றெக்ஸ் குயின்ரன் | சி.கெயின்ஸ் | ச.சாந்தறூபன் |
| விஞ்ஞானம் | இ.றெக்ஸ் | ச.சதீஸ்குமார் | சி.கெயின்ஸ் |

| | | | |
|---|---|---|---|
| | குயின்ரன் | | |
| வரலாறு | இ.றெக்ஸ் குயின்ரன் | தி.ஜெயராஜ் | ச.சதீஸ்குமார் |
| குடியியல் | இ.றெக்ஸ் குயின்ரன் | ச.சதீஸ்குமார் | சி.கெயின்ஸ் |
| புவியியல் | இ.றெக்ஸ் குயின்ரன் | ச.சதீஸ்குமார், சி.கபிலன் | |
| சித்திரம் | ச.கபிலன் | ச.சதீஸ்குமார் | நே.ரனிஸ்லஸ் |
| சங்கீதம் | கு.தனுராஜ் | அ.சாள்ஸ்டிலக்சன் | ப.பயஸ் |
| நாட..அரங்கியலும் | | | |
| றோ.கத்தோ. | ச.சதீஸ்குமார் | இ.றெக்ஸ் குயின்ரன் | அ.சாள்ஸ்டிலக்சன் |
| இந்துசமயம் | தி.ஜெயராஜ் | கு.தனுராஜ் | ச.கபிலன் |
| சுகாதாரம் | ச.சதீஸ்குமார் | சி.கெயின்ஸ் | றேக்ஸ் குயின்ரன் |

| தரம் 10 2010 | 1ம் பரிசு | 2ம் பரிசு | 3ம் பரிசு |
|---|---|---|---|
| தமிழ் | சு.நாகசுதன் | யே.நோபேட் | எம்.சுஜீபன் |
| கணிதம் | எம்.சுஜீபன் | சு.நாகசுதன் | யே.நோபேட் |
| ஆங்கிலம் | அ.டன்ஸ்ரன் | ச.நிவேன் | சி.வசந்தராஜ் |
| விஞ்ஞானம் | சு.நாகசுதன் | அ.டன்ஸ்ரன் எம்.சுஜீபன | |
| வரலாறு | எம்.சுஜீபன் | சு.நாகசுதன் | ஜே.நிவேன்,ப.அனற்ராஜன் |
| றோ.கத்தோ. | யே.நோபேட் | அ.டன்ஸ்ரன் | சி.வசந்தராஜ் |
| இந்துசமயம் | எம்.சுஜீபன் | மு.துளசிதரன் | சு.நாகசுதன் |
| குடியியல் | ச.நிவேன் | யே.சசிராஜன் | சே.செல்வதாஸ் |
| சித்திரம் | யே.சசிராஜன் | எ.மெல்வினஸ் | எம்.சுஜீபன் |
| சங்கீதம் | யே.நோபேட் | றே.அன்ரனி றோலண்ட் | சு.நாகசுதன் |
| நாடகமும் அரங்கியலும் | அ.அல்பிரட் நிமல்சன் | சி.வசந்தராஜ் | ப.பி.அனற்ராஜுன் |
| கடல்வளம் | அ.ப.மெல்விள ஸ் | சி.வசந்தராஜ் | ப.பி.அனற்ராஜுன் |
| சுகாதாரம் | பே.ல.பேட்நியாந் | வி.துளசிகரன் | க.கிருசாந் |
| தகவல் தொ.தொ.நு | எம்.சுஜீபன் | சு.நாகசுதன் | அ.டன்ஸ்ரன் |
| வர்த்தகம் | யே.நோபேட் | எம்.சுஜீபன் | அ.டன்ஸ்ரன் |

## 2010 க.பொ.த (சா/த) பரீட்சையில் A தர சித்தி பெற்ற மாணவர்

| பாடம் | மாணவர் பெயர் | | |
|---|---|---|---|
| தமிழ் | அ.அல்பிறட் யூட்சன் | ம.அனால்ட் சரண்சன் | செ.அருள்ராஜ் |
| | ம.டினோசன் | சூ.ஜெனிஸ்ரன் | ஜே.ஜெயலக்சன் |
| | தே.ம.கெயின்சன் | ம.குணச்செல்வன் | ம.மரியரூபன் |
| | இ.வேணுதீபன் | | |
| றோ.கத்தோ. | அ.அல்பிரட் யூட்சன் | ம.அனால்ட் சரண்சன் | தே.ஆன்ரனி கனியூட் |
| | செ.அருள்ராஜ் | ம.டினோசன் | இ.எமில்சன் |
| | ஜெ.ஜெசிந்தன் | சூ.ஜெனிஸ்ரன் | ஜெ.ஜெயலக்சன் |
| | ஸ்.ஜோண் கீட்ஸ் | ம.ஜோய் வினோஜன் | தே.ம.கெயின்சன் |
| | ம.மரியரூபன் | ந.நிஜிஸ்ரன் | ஜோ.ராஜ் றொசின்ரன் |
| | சே.யோகநேசன் | | |
| கணிதம் | சு.றொக்சன் | | |
| வரலாறு | செ.அருள்ராஜ் | | |
| சித்திரம் | ம.டினோசன் | | |
| சங்கீதம் | ம.மரியரூபன் | | |
| நாடகமும் அரங்கியலும் | செ.அருள்ராஜ் | ஜெ.ஜெசிந்தன் | சூ.ஜெனிஸ்ரன் |
| | தே.ம.கெயின்சன் | இ.வேணுதீபன் | ஜோ.ராஜ் றொசின்ரன் |
| சுகாதாரமும் உடற்கல்வியும் | ம.அனால்ட் சரண்சன் | செ.அருள்ராஜ் | தே.ம.கெயின்சன் |

| தரம் - 12-2010 | 1ம் பரிசு | 2ம் பரிசு | 3 ம் பரிசு |
|---|---|---|---|
| வணிகக்கல்வி | அ.அல்பிரட் நியூட்டன் | ம.நீல் கிளின்டன் | ப.செந்தி ஜோண்சன் |
| கணக்கீடு | அ.அல்பிரட் நியூட்டன் | ம.நீல் கிளின்டன் | க.புனிதன் |
| பொருளியல் | அ.அல்பிரட் நியூட்டன் | | |
| தமிழ் | த.தர்சிகன் | இ.நிலாஜினி | பூ.கிரிஜா |
| இந்துநாகரீகம் | பூ.கிரிஜா | இ.நிலாஜினி | உ.சஞ்சீஸ்கரன் |
| கிறீஸ்தவ நாகரிகம் | ஜே.வாணிப்பிரியா | த.தர்சிகன் | சு.நொய்லின் |
| நாடகமும் | லு.ஜோசவ் | ஜே.கரிப்பிரதாஸ் | பே.மதிதரன் |

| | | | |
|---|---|---|---|
| அரங்கியலும் | தனுசன் | | |
| அரசறிவியல் | இ.நிலாஜினி | தி.கிருசாந் | |
| சித்திரம் | சே.சந்துஜா | இ.ரஜிதரன் | |
| புவியியல் | தி.கிருசாந் | | |

| தரம் 13 2010 | 1ம் பரிசு | 2ம் பரிசு | 3ம் பரிசு |
|---|---|---|---|
| வணிகக்கல்வி | ம.அனஸ் லூாஜன் | பி.கோல்ஜின் டயஸ் | |
| பொருளியல் | அ.அருள் பபில்ராஜ் | ம.அனஸ் லூாஜன் | பி.கோல்ஜின் டயஸ் |
| தமிழ் | அ.அருள் பபில்ராஜ் | இ.சுபாஜினி | ஜே.வெரோணிக்க |
| அளவையியல் | இ.பகீரதன் | | |
| இந்துநாகரீகம் | இ.சுபாஜினி | சி.சந்திரவதனா | நா.தர்சினி |
| கிறீஸ்தவம் | அ.அருள் பபில்ராஜ் | சி.மாரின் யுதித் | ப.தர்சிகன் |
| நாட.அரங்கியலும் | இ.பகீரதன் | பி.அ.அருண்ராஜ் | யோ.தர்சன் |
| அரசறிவியல் | இ.சுபாஜினி | சி.மாரின் யுதித் | ஜே.வெரோணிக்க |
| சித்திரம் | அ.டெமின்கோ | ம.மயூரி | |

**க.பொ.த (உ/த) 2010 பரீட்சையில் A தர சித்தி பெற்ற மாணவரின் பாடரீதியான விபரம்.**

| பாடம் | மாணவர் பெயர் | | |
|---|---|---|---|
| கிறிஸ்தவம் | நி.அனிஸ்ரன் | கி.குளோடியஸ் டாவின் | இ.ஞா.லக்ஸ்மன் |
| | ம.மகின்சியா | ம.மேரி டிசானி | அ.ஜெனால்ட் லக்சன் |

**வகுப்பு ரீதியாக பொதுத் தகமைக்குரிய பரிசு பெறும் மாணவர்**

| தரம் | பெயர் |
|---|---|
| 6 | அ.பி.ஜெனிபர் |
| 7 | சி.டினோசன் |
| 8 | ஜெ.ரஜீவன் |
| 9 | இ.றெக்ஸ் குயின்ரன் |

**கணிதபாட சிறப்புப் பரிசு பெறுவோர்**

| தரம் | பெயர் |
|---|---|
| 6 | அ. பெ.ஜெனிபர் |
| 7 | ஸ்ரீ. டினோசன் |
| 8 | ஜெ. றஜீவன் |
| 9 | இ.றேக்ஸ் குயின்ரன் |
| 10 | எம்.சுஜீபன் |

| | |
|---|---|
| 10 | சு.நாகசுதன் |
| 12 கலை | இ.நிலாஜினி |
| 12 வர்த்தகம் | அ.அல்பிரட் நியூட்டன் |
| 13 கலை | அ.அருள் பபில்ராஜ் |
| 13 வர்த்தகம் | ம.அனஸ் லூஜன் |

**சிறந்த பொதுப்பரீட்சை பெறுபேற்றிற்காக பரிசு பெறும் மாணவர்கள்.**

| பரீட்சை | மாணவர் பெயர் | பெறுபேறு |
|---|---|---|
| க.பொ.த (சா/த) | செ.அருள்ராஜ் | 5ஏ 2பி 1சி 1எஸ் |
| க.பொ.த (உ/த) கலை | நி.அனிஸ்ரன் | ஏ பி சி |

**சிறந்த மெய்வல்லுனர் பரிசு பெறும் மாணவர்கள்**

| வயது | 2010 |
|---|---|
| 13 க்கு கீழ் | ம.சாரங்கன் |
| 15 க்கு கீழ் | டே.பிரசாத் |
| 17 க்கு கீழ் | எ.எமில்சன் |
| 19 க்கு கீழ் | அ.அருள் பபில்ராஜ், சி.லஸ்ரின் |
| 21 க்கு கீழ் | ம.தினேஸ், அ.டொமின்கோ, பி.பற்றிக் டிலான், ம.ஆள்தோ |
| பெண்கள் | ப. விஜிதா |

**2010ல் புலமைப்பரிசில்களைப் பெற்றுக் கொள்ள புதிதாக இணைந்து கொண்டமைக்காக பரிசு பெறும் மாணவர்கள்**

| பெயர் | புலமைப்பரிசில் |
|---|---|
| அ.அல்பிரட் நியூட்டன் | சிப்தொரா |
| ம.நீல் கிளின்டன் | சிப்தொரா |
| உ.சஞ்சீஸ்கரன் | சிப்தொரா |
| தி.கிருசாந் | சிப்தொரா |

| | |
|---|---|
| நா.கஜன்ராஜ் | சிப்தொரா |
| இ.நிலாஜினி | சிப்தொரா |
| செ.சிந்துஜா | சிப்தொரா |
| அ.யூட்ஸ் மயூரி | சிப்தொரா |

**துறைசார் திறமைக்காக பரிசுபெறும் மாணவர்கள்**

| விடயம் | 2010 |
|---|---|
| உதைபந்தாட்டம் | சி.லஸ்ரின் |
| கரப்பந்தாட்டம் | ஜே.கரிப்பரசாத் |
| துடுப்பாட்டம் | அ.அருண்ராஜ் |
| பூப்பந்தாட்டம் | ஸ்.ஜோண் கீட்ஸ் |
| உடற்பயிற்சி | ப.சிவதீபன் |
| சதுரங்கம் | ஸ்.ஜோண் கீட்ஸ் |
| சகல துறை | அ.டொமின்கோ |
| சாரணியம் | ம.அனால்ட் சரண்சன் |
| சென்.ஜோண்ஸ் அம்புலன்ஸ் | ஜே.கரிப்பிரசாத் |

**மாகாண மட்ட விஞ்ஞான வினாடி வினா போட்டி 2010**

| பெயர் | நிலை |
|---|---|
| அ.பெ.ஜெனிபர் | 3 |

சிறந்த நூலகப் பயன்பாட்டிற்காக பரிசுபெறும் மாணவர்கள்

| பிரிவு | 2010 |
|---|---|
| கீழ்ப்பிரிவு | சு.நாகசுரேன் |
| மேல்ப்பிரிவு | சிசிந்துஜா |

## 2010 ம் ஆண்டின் கல்லூரியின் சிறந்த ஆசிரியர்

## Staff of the year 2010

## Mrs. Sivamathy Thirumaran

| Year | Antonian of the Year | Staff of the Year |
|---|---|---|
| 2002 | Mas.A.Anistan Jeyakumar | Mr.P.W.Navarajah |
| 2003 | Mas.J.J.Kirisenthira | Mr.S.Sathananthan |
| 2004 | Mas.R.Anosanth | Mrs.C.P.S.W.Navarajah |
| 2005 | Mas.K.Puvi | Mrs.P.Theva |
| 2006 | Mas.G.A.Lintan Jathees | Mr.K.Kiomar |
| 2007 | Mas.E.G.Luxman | Miss.A.Arulanantham |
| 2008 | Mas.N.Kishanraj | Mr.S.Jasotharan |
| 2009 | Mas.A.Babilraj | Miss.N.Nadarajah |

## பல்கலைக்கழக அனுமதி பெற்றமைக்கான பரிசு

| பெயர் | துறை |
|---|---|
| செல்வி. ம.மேரி டிசானி | நுண்கலை |
| செல்வன். அ.றெ.அனோஜன் | கலை |

## விளையாட்டு முடிவுகள் 2010

**தேசிய மட்டத்தில் 3 ம் இடத்தைப்பெற்ற உடற்பயிற்சி அணி விபரம்**

| பெயர் | பெயர் |
|---|---|
| 1. ப.சிவதுஈபன் | 16. றொ. அனுஜன் |
| 2. அ. பிறின்ஸ்இனோச் | 17. யோ.பிரதீபன |
| 3. எ. எமில்சன் | 18. மு.ஜோகதீபன் |
| 4. அ.அருள் பவில்ராஜ் | 19. கா. கோகுலன் |
| 5. கு. நிதர்சன் | 20. கு. மேகலரூபன் |
| 6. ஜே. ஹரிப்பிரதாஸ் | 21. ம. ஆனல்ட் சரண்சன் |
| 7. சி. லஸ்ரின் | 22. ஸ்ரீ. றெமில்டன் |
| 8. அ.அமிர்த ஜஜீத் | 23. லூ.ஜோசவ் தனுசன் |
| 9. அ.அருண்ராஜ் | 24. கு.குணராஜ் |
| 10. ஜெ.கனிஸ்ரன் | 25. மு.பே.நியாந் |
| 11. ம.மதனராஜ் | 26. சி.வசந்தராஜ் |
| 12. ஜெ.சசிராஜன் | 27. ஜே.பெ.விதுசன் |
| 13. இ.வேணுதீபன் | 28 ம.மயுரன் |
| 14. கி.செ.யோகநேசன் | 29 இ.வினோத் |
| 15. ற. றஜிதரன் | 30 லோ.டரன்ஸ் அன்ரனி |

## பெரு விளையாட்டுக்கள் 2010

| பிரிவு | உதைபந்து | கரப்பந்து | கிரிக்கெட் | பட்மின்ரன் | சதுரங்கம் | உடற்பயிற்சி |
|---|---|---|---|---|---|---|
| 15 வயது | கோ-1<br>வ -1 | கோ-1<br>வ- 1 | | | கோ– 2 | |
| 17 வயது | கோ-1<br>வ -1 | கோ-2<br>வ- 2 | | | | |
| 19 வயது | கோ-1<br>வ -1 | கே-1<br>வ- 2<br>மாவ-3 | வ- 1 | வ-1 | கோ-3 | வ-1<br>மாவ-2<br>மாகா-2<br>தேசி-2 |

### மெய்வல்லுனர்

| கோ.மட்ட முடிவு | வலயமட்ட முடிவு | மாவட்ட முடிவு | மாகாண முடிவு |
|---|---|---|---|
| 1ம்இடங்கள் - 42<br>2ம்இடங்கள் - 36<br>3ம்இடங்கள் - 12<br><br>புள்ளிகள் 230 | 1ம் இடங்கள் - 37<br>2ம் இடங்கள் - 27<br>3ம் இடங்கள் - 12<br><br>புள்ளிகள் 278 | 1ம்இடங்கள் - 07<br>2ம்இடங்கள் - 02<br>3ம்இடங்கள் - 01 | 1ம்இடங்கள் - 05<br>2ம்இடங்கள் - 01<br>3ம்இடங்கள் - 01 |

**தேசிய மட்டம் (21 வயதின்கீழ்) 4x100 அஞ்சலோட்டம் 3ம் இடம்**

| | | | |
|---|---|---|---|
| மா. தினேஸ் | பே.ஆள்தோ | கி.ஜெபநேசன் | அ.டொமின்கோ |

கோ- கோட்ட மட்டம் வ- வலயமட்டம் தே-தேசிய மட்டம்
மாவ- மாவட்டமட்டம் மா- மாகாணமட்டம்

# English Day 2010 – Winners at Zonal Level Competition

| Division / Name | Grade | Recitation | Copy Writing | Creative Writing | Dictation | Oratory | Reading | Solo Acting | Role Play |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **Group** | 6 | | | | | | | | 1 |
| A.Diroshan | 7 | 1 | | | | | | | 1 |
| S.Mervin Jude<br><br>J.Rajeevan | 8 | | | 1<br><br>2 | 2 | | | | 2 |
| **Group** | 9 | | | | | | | | 1 |
| J. Nobert<br>A.Dunstan | 10 | | | | | | | <br>1<br>2 | 1 |
| **Group**<br>M.Keinson<br>S.Arulraj | 11 | | | | | | | <br>1<br>2 | 1 |
| S.Sinthuja<br>S.Kema<br>S.Noilin | 12 | | | | | <br>1<br>2 | | 1 | |
| **Grade 13**<br>J.Veronika<br>V.Tharshiga<br>R.Chrishanth | 13 | | | <br><br>1<br>2 | | <br>1 | | <br>1 | |
| **Grade 6-9**<br>Junior Boys | Group Singing Zone -1 | | | | | | | | |
| **Grade 10-11**<br>Senior Boys | Group Singing Zone -1 | | | | | | | | |
| **Grade 6 - 9**<br>Junior | Drama Zone -1 | | | | | | | | |
| **Grade 10-13**<br>Senior | Drama (Dialouge) Zone -1 | | | | | | | | |

தமிழ்த்தினப் போட்டி 2010

| நிகழ்ச்சி | பெயர் | பிரிவு | கோட் | வலய | மாவ | மாகா |
|---|---|---|---|---|---|---|
| கட்டுரை | அ.சாள்ஸ் டிறோசன் | 2 | | 3 | | |
| | எ.அல்பிறட் யூட்சன் | 4 | | 2 | | |
| கவிதை | சி.நிவெதினி | 5 | | 1 | | |
| சிறுகதை | எ.ஞா.லக்ஸ்மன் | 5 | | 1 | | |
| வாசிப்பு | தே.அன்ரனி அன்று | 1 | 1 | 2 | | |
| பேச்சு | சி.டினோசன் | 2 | 1 | 1 | | |
| | அ.சாள்ஸ் டிலக்சன் | 3 | 1 | 2 | | |
| | சே.அருள்ராஜ் | 4 | 1 | 1 | | |
| | அ.தயாட்றூஸ் | 5 | 1 | 1 | | |
| பாவோதல் | இ.றெக்ஸ் குயின்ரன் | 3 | 1 | 1 | | |
| | யே.வெரோனிக்கா | 2 | 1 | 2 | | |
| தனிஇசை | ம.டிசானி | 2 | 1 | 2 | | |
| | கி.கெதோடியஸ் மேவின் | 2 | 2 | | | |
| நாட்டார் பாடல் | குழு | 1 | 1 | 2 | | |
| வில்லுப்பாட்டு | குழு | 1 | 1 | 1 | | |
| இலக்கிய நாடகம் | குழு | 1 | 1 | 1 | | |
| தமிழறிவு வினாவிடை | குழு | 1 | 1 | 1 | | |
| விவாதம் | குழு | 1 | 1 | 1 | | |
| இசைநாடகம் | குழு | 1 | 1 | 1 | 1 | 1 |

மாவட்ட மட்ட விஞ்ஞான வினாடி வினா போட்டி 2010

| பெயர் | தரம் | பெயர் | தரம் |
|---|---|---|---|
| பே.ஜெனிபர் | 6 | சு.நாகசுதன் | 10 |
| ஸ்ரீ. டினோசன் | 7 | அ.டன்ஸ்ரன | 10 |
| சு.நாகசுரேன் | 8 | எம்.சுஜீபன் | 10 |
| ச.சதீஸ்குமார் | 9 | ம.அனால்ட் சரண்சன் | 12 |

## தமிழ் தாய் வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே

ஏழ்கடல் வைப்பிலுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே

சூழ்கலி நீங்க தமிழ்மொழி ஓங்க
துலங்குக வையகமே
தொல்லை வினைதரு தொல்லையகன்று
சுடர்க தமிழ்நாடே

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே
வானம் அறிந்த தனைத்து மறிந்து
வளர்மொழி வாழியவே

## COLLEGE ANTHEM

Let's sing this tuneful Anthem hearty
Sing it loud with heart sincere.
True to Christ, our School and country,
Onwards we shall march secure.

***Chorus***

*Give the utmost for the highest,*
*Let that always be our aim.*
*Strive to gain from life the fullest,*
*For that's real fame.*

Rally round the Alma Mater,
Loyal, honest, faithful and kind,
Men of truth and men of honour,
Strong in body, sprit and mind.

***Chorus***

*Give the utmost for the highest,*
*Let that always be our aim.*
*Strive to gain from life the fullest,*
*For that's real fame.*